RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 54 | மார்ச்.2 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# முதல்வர் ஸ்டாலின் 73வது பிறந்தநாள் கொண்டாட்டம்: தலைவர்கள் வாழ்த்து

சென்னை: மார்ச்.2-

தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தனது 73வது பிறந்தநாளை நேற்று உற்சாகமாகக் கொண்டாடினார். குடும்பத்தினர், அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், முக்கிய தலைவர்கள், லட்சக்கணக்கான தொண்டர்களின் வாழ்த்து மழையில் நனைந்தார்.

முதல்வர் ஸ்டாலினின் 73வது பிறந்தநாள் கொண்டாட்டங்கள் ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்தில் அதிகாலையிலேயே தொடங்கின. முதல்வரின் மனைவி துர்கா ஸ்டாலின் மற்றும் குடும்பத்தினர் அவருக்கு மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

குடும்பத்தினர் முன்னிலையில் முதல்வர் கேக் வெட்டி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார். இந்த நிகழ்வில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், கிருத்திகா உதயநிதி, மகள் செந்தாமரை, மருமகன் சபரீசன் மற்றும் பேரக்குழந்தைகள் உடனிருந்து வாழ்த்தினர். இதனைத் தொடர்ந்து துரைமுருகன் உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் சந்தித்து வாழ்த்துக் கூறினர்.

பின்னர் அண்ணா, கருணாநிதி ஆகியோரின் நினைவிடங்களில் முதல்வர் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அங்கிருந்த கட்சி நிர்வாகிகள் அவருக்கு புத்தகங்களை வழங்கி வாழ்த்தினர். பிறகு நினைவிடப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்கினார். பின்னர் வேப்பேரி பெரியார் திடலுக்குச் சென்ற முதல்வரை, திராவிடர் கழகத் தலைவர் வீரமணி வரவேற்றுப் புத்தகம் வழங்கினார். அங்கு பெரியார் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து முதல்வர் வணங்கினார்.

அதன்பிறகு, கோபாலபுரம் இல்லத்துக்குச் சென்ற முதல்வர், அங்குள்ள கருணாநிதி படத்துக்கு மலர் தூவி வணங்கினார். தாயார் தயாளு அம்மாளிடம்ஆசி பெற்றார். பின்னர் சிஐடி காலனி இல்லம் சென்ற அவரை சகோதரி கனிமொழி எம்.பி. வரவேற்றார்.

அங்கு ராஜாத்தி அம்மாளிடம் வாழ்த்துப் பெற்றதோடு, கருணாநிதி படத்துக்கு மரியாதை செலுத்தினார். அதன்பிறகு திமுக தலைமை அலுவலகம் சென்ற முதல்வருக்கு



சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. மேளதாளங்கள் முழங்க, பட்டாசுகள் வெடிக்கத்தொண்டர்கள் விண்ணதிர முழக்கமிட்டு அவரை வரவேற்றனர்.

மூத்த நிர்வாகிகள் முன்னிலையில் முதல்வர் பிரம்மாண்ட கேக் வெட்டினார். பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வரிசையில் நின்று மாலைகள், பொன்னாடைகள், புத்தகங்கள், பூக்கூடைகளை வழங்கி தங்களது அன்பை வெளிப்படுத்தினர். மேலும் கூட்டணி கட்சியினரும் முதல்வரை சந்தித்து தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இவர்கள் தவிர குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் மோடி கடிதம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்ததோடு தொலைபேசி வாயிலாகவும் வாழ்த்தினர்.

திரவுபதி முர்மு: கடவுள் உங்களுக்கு நல்ல ஆரோக்கியத்தையும், மகிழ்ச்சியையும் அளித்து இன்னும் பல ஆண்டுகள் தேசத்துக்கு தொடர்ந்து அர்ப்பணிப்புடன் சேவை செய்ய அருள்புரிவாராக.

பிரதமர் மோடி: நீண்ட ஆயுளும், நல்ல ஆரோக்கியமும் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி: நல்ல ஆரோக்கியம், வலிமை, நீண்ட ஆயுள் பெற்று தமிழக மக்களுக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்ய வேண்டும்.

ஆளுநர் ஆர்.என்.ரவி: நல்ல ஆரோக்கியத்துடன், மகிழ்ச்சியாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ பிரார்த்திக்கிறேன்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு: மக்களுக்குச் சேவை செய்வதற்காக அர்ப்பணிப்புடன் நீண்ட ஆயுள் பெற பிரார்த்திக்கிறேன்.

கேரளம் முதல்வர் பினராயி விஜயன்: நாட்டின் ஜனநாயக மற்றும் மதச்சார்பற்ற நெறிமுறைகளைப் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராகப் பாதுகாப்பதில் நீங்கள் கொண்டுள்ள உறுதியை நான் வணங்குகிறேன். நமது நாட்டை வரையறுக்கும் அரசியல் அமைப்பு விழுமியங்களை நிலைநிறுத்த நாம் ஒன்றிணைந்து நிற்கும் வேளையில் இந்த ஆண்டு உங்களுக்கு நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் மக்களுக்குச் சேவை செய்வதில் தொடர்ச்சியான வெற்றியைப் பெற வாழ்த்துகிறேன்.

இதேபோல் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம், நடிகர் ரஜினிகாந்த், விசிக தலைவர் திருமாவளவன், தேமுதிக பொருளாளர் சுதீஷ், கொமதேக பொதுச் செயலாளர் ஈஸ்வரன், மமக தலைவர் ஜவாஹிருல்லா, ஆம் ஆத்மி மாநில தலைவர் வசீகரன், தவாக தலைவர் வேல்முருகன், மநீம தலைவர் கமல்ஹாசன், தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, முன்னாள் முதல்வர் ஓபிஎஸ், பாமக தலைவர் அன்புமணி, முன்னாள் பாஜக மாநில தலைவர் தமிழிசை என பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

## கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா நிறைவு

இராமேசுவரம், மார்ச்.02-

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா நேற்று நிறைவடைந்தது. இங்கு நேற்று முன்தினம் மாலை கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. நெடுந்தீவு பங்குத் தந்தை பத்திநாதன்கொடியேற்றி வைத்தார். தொடர்ந்து, சிலுவைப் பாதை, திருப்பலி, தேர் பவனி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



முக்கிய நிகழ்வாக நேற்று காலை கூட்டு திருப்பலி நடைபெற்றது. யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் ஜோசப்தாஸ் ஜெபரத்தினம், நெடுந்தீவு பங்குத்தந்தை பத்திநாதன், ராமேசுவரம் வேர்கோடு பங்குத் தந்தை தாமஸ் பரிபாலன் ஆகியோர் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் திருப்பலி நடத்தினர்.

இதில், இலங்கை கடற்படையின் வைஸ் அட்மிரல் மனகோடா,வடக்கு கட்டளை தளபதி கேப்டன் லியங்கமேகி, இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரி சாய் முரளி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்தியாவிலிருந்து சென்ற 3,741 பேர், இலங்கையிலிருந்து சென்ற 9 ஆயிரம் பேர் என 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நேற்று காலை பக்தர்களுக்கு இலங்கை கடற்படை சார்பில் உணவு வழங்கப்பட்டது. பின்னர், இந்தியாவிலிருந்து சென்ற பக்தர்கள் நேற்று மாலை ராமேசுவரம் திரும்பினர்.

விரைவில் பேச்சுவார்த்தை... இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கச்சத்தீவு இலங்கைக்கு சொந்தமானது. இந்தியஇழுவைப்படகு மீனவர்கள் சிலர் சட்டவிரோதமாக செயல்படுவதால் கடல் வளம் அழிகிறது. இதனால், இந்தியா மற்றும் இலங்கை நாட்டுப் படகு மீனவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இந்திய இழுவைப்படகு உரிமையாளர்கள் தயவு செய்து கடல் வளத்தை அழிக்கும் வேலையை செய்ய வேண்டாம்.

கச்சத்தீவு பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதை அனுமதிக்க முடியாது. தமிழக அரசியல்வாதிகள் தேர்தல் நேரங்களில் கச்சத்தீவை அரசியலுக்காகப் பயன்படுத்துகின்றனர். இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா இந்தியா வந்திருந்தபோது, இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மோடியிடம் பேசியுள்ளார். மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்" என்றார்.

## பெரியார், அண்ணா, கருணாநிதி காட்டிய பாதையில் பயணித்து வெல்வோம் ஒன்றாக: ஸ்டாலின் சூளுரை

சென்னை: மார்ச்.2-

பெரியார், அண்ணா, கருணாநிதி நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக! என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

தனது 73வது பிறந்த நாளை முன்னிட்டு திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், "தமிழும் தமிழ் நாடும் நம் உயிர்! அவற்றைக் காப்பது நம் கடமை!.

உழைப்பைத் தவிர வேறொன்று அறியேன் எனச் சொல்லி, இளமை முதல் 73ம் வயது காணும் இந்நாள் வரையில், நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பணியாற்றுவதே என் வாழ் நாள் கடமை எனச் செயலாற்றி வருகிறேன். தமிழும் தமிழ் நாடும் தலை நிமிர்ந்த வரலாற்றில் நான் சிறு தொண்டனாய் இருந்தாலும், கிடைக்கின்ற வாய்ப்புகளில் எல்லாம் பெருந்தொண்டாற்றிடவே நினைக்கிறேன்.

அந்த உறுதியோடு தான், "Dravidian Model-ல் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கி, முன்னேற்றப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். உலகம் திரும்பிப் பார்க்கும் வகையில், இந்தியாவின் தலை சிறந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டியிருக்கிறேன். கோடிக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இல்லத்திலும் போய்ச் சேர்ந்துள்ளது திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களும், சாதனைகளும்!

தனிக்குணம் கொண்ட தமிழர் தலை நிமிர்ந்து வாழ்கின்றனர்; நாட்டிற்கே புத்தொளியை வழங்குகின்றனர் என்று புகழும் வகையில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது! நம் தமிழினத்தின் லட்சியப் பயணத்தில், நம் கால்கள் பாதை மாறக் கூடாது; நம் தலை யாரிடமும் எதற்காகவும் தாழக் கூடாது! சூழ்ந்து வரும் சூழ்ச்சிகளை அறிவுத்திறத்தால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடித்திட வேண்டும். இதற்காக என்னை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்வேன்.

இதுவே என் பிறந்தநாள் உறுதிமொழி! பெரியார் அண்ணா கருணாநிதி ஆகியோர் நமக்குக் காட்டிய பாதையில், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் எனப் போர்க்குணத்தோடு பயணித்து வெல்வோம் ஒன்றாக!" என்று தெரிவித்துள்ளார்.

## தமிழக ரயில் திட்டங்களுக்கான நிதி 9 மடங்கு அதிகரிப்பு

மதுரை : மார்ச்.2


"தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை ரூ.880 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு 2026 27 ஆண்டில் ரூ.7600 கோடியாக உயர்ந்தது" என பிரதமர் மோடி பேசினார்.

தமிழகத்தில் ரூ.4,400 கோடி மதிப்புள்ள மரக்காணம் புதுச்சேரி நான்கு வழிச்சாலை, பரமக்குடி ராமநாதபுரம் பிரிவு நான்கு வழிச்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா, பொம்மிடி, காரைக்குடி, மணப்பாறை, மொரப்பூர், பொள்ளாச்சி, சோழவந்தான், ஸ்ரீவில்லித்புத்தூர் மற்றும் திருவாரூர் அம்ரித் ரயில் நிலையங்கள் திறப்பு மற்றும் சென்னை கடற்கரை சென்னை எழும்பூர் 4வது ரயில் வழித்திட்டம் நாட்டுக்கு அர்பணிக்கும் விழாக்கள் மதுரை விமான நிலைய வளாகத்தில் இன்று நடைபெற்றன.

இத்திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "புனிதமான மதுரை மாநகருக்கு வருவதை பெரும் கவுரவமாக உணர்கிறேன். மதுரையை ஆட்சி செய்யும் மீனாட்சியம்மனுக்கும், சுந்தரேஸ்வருக்கும் தலை வணங்குகிறேன். இந்த விழா தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கியமானது. இன்று ரூ.4,500 கோடிக்கு மேல் மதிப்புள்ள திட்டங்களை தொடங்கி வைத்துள்ளேன்.

இத்திட்டங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும், விவசாயிகள், சுற்றுலா பயணிகள், புனித யாத்திரை மேற்கொள்பவர்களுக்கு அதிக பயனளிக்கும். இதுபோன்ற உயர்தர கட்டமைப்புகளை உருவாக்குவது மக்களுக்கு அதிகார பங்களிப்பை அளிப்பதாகும்.

கடந்த 12 ஆண்டுகளாக தமிழக நெடுஞ்சாலை வளர்ச்சிக்கு மத்திய அரசு அதிக நிதி ஒதுக்கி வருகிறது. தமிழகத்தில் 2014 முதல் 4,000 கிலோ மீட்டர் தூரத்துக்கு புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று இரண்டு பெரிய தேசிய நெடுஞ்சாலை திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மரக்காணம் புதுச்சேரி நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.2,100



கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால் தமிழ்நாடு புதுச்சேரி கடற்கரைப் பகுதியில் சுற்றுலா, வர்த்தகம், பொருளாதாரம் பலமாகும். பரமக்குடி ராமேஸ்வரம் நான்கு வழிச்சாலை திட்டத்துக்கு ரூ.1,800 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சாலையால் ராமேஸ்வரம் தனுஷ்கோடி பகுதி முன்னேறும். ராமேஸ்வரத்துக்கு புனித பயணம் மேற்கொள்பவர்கள், வேளாண் உற்பத்தி பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லும் விவசாயிகள், கடல்சார் பொருட்களின் போக்குவரத்தையும் மேம்படுத்தும்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்திய ரயில்வேத்துறை பெரும் மாற்றம் கண்டுள்ளது. ரயில் போக்குவரத்து, நவீன திறன் மிகுந்த மக்கள் சார்ந்த போக்குவரத்தாக மாறியுள்ளது. இந்த மாற்றம் தமிழகத்தில் நன்கு தெரிகிறது. தமிழக ரயில் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு 9 மடங்கு அதிகரித்துள்ளது. 2009 முதல் 2014 வரை நிதி ஒதுக்கீடு ரூ.880 கோடியாக இருந்தது. 2026 2027 நிதியாண்டில் இது ரூ.7600 கோடியாக உயர்ந்தது.

தமிழ்நாட்டில் 1300 கிலோ மீட்டருக்கு அதிகமாக புதிய ரயில் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. 97 சதவீத மின்மயமாக்கல் பணிகள் முடிந்துள்ளன. நூற்றுக்கணக்கான மேம்பாலங்கள், சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்தாண்டு ராமேஸ்வரத்தில் புதிய பாம்பன் பாலம் திறக்கப்பட்டது. இது இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு கடல் பாலமாகும். இது நமது பொறியியல் திறனின் அடையாளமாகும். இப்பாலம் சுற்றுலா பயணிகளை அதிகளவில் ஈர்த்து வருகிறது.

தமிழகத்தில் தற்போது 9 வந்தே பாரத், 9 அம்ரித் பாரத் ரயில்கள் சேவையாற்றி வருகின்றன. இந்த ரயில்களின் பெட்டிகள் சென்னையில் தயாரிக்கப்படுகின்றன. இதனால் ஏராளமான இளைஞர்கள் வேலைவாய்ப்பை பெற்று வருகின்றனர். அம்ரித் திட்டத்தில் 77 ரயில் நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ரயில் நிலையங்களில் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கும்பகோணம், ஏற்காடு, வேலூர் ஆகாசவாணி புதிய பண்பலை அஞ்சல் நிலையங்கள் மக்கள் சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. தமிழக உள்கட்டமைப்புக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 10 ஆண்டுகளை ஒப்பிடுகையில் 3 மடங்கு அதிகரித்துள்ளது. 2026 மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அந்த பட்ஜெட்டில் சென்னை பெங்களூர், சென்னை ஹைதராபாத் புல்லட் ரயில் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் இப்பகுதிகளின் பொருளாதாரத்தை முழுமையாக மேம்படுத்தும்.

தமிழ்நாடு வளமான வரலாறு மற்றும் மரபுக்கு சொந்தமான மாநிலம். ஆதிச்சநல்லூர் போன்ற வரலாற்று சிறப்புமிக்க இடங்கள் உலகளவில் வரலாற்று சிறப்பு மிக்க இடமாக மாற்றப்படும். புலிகாட் ஏரி, பொதிகை மலைப்பகுதி ஆகியவற்றில் சுற்றுச்சூழல் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும். இதனால் வேலைவாய்ப்புகள் பெருகும். அதே நேரத்தில் இயற்கை வளம் பாதுகாக்கப்படும்.

நாடு முழுவதும் 200 தொழில்துறை தொகுப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இங்கு தயாரிப்புகள் ஊக்கப்படுத்தப்படும். இதில் தமிழ்நாட்டிலும் பல்வேறு தொழிற்சாலைகள் உள்ளன. இதனால் தமிழக இளைஞர்கள் பலனடைவர்.

2047க்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற உணர்வில் ஒவ்வொரு இந்தியரும் உள்ளனர். நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தமிழ்நாடு முக்கிய பங்காற்றும். நம் அனைவரின் மொத்த இலக்கும் வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் வளர்ச்சிடைந்த தமிழகத்தை உருவாக்குவதாக இருக்க வேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய மாநிலத்தின் முன்னேற்றத்தை உறுதி செய்வதில் மத்திய அரசு முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

முன்னதாக மத்திய அமைச்சர் எல்.முருகன் பேசுகையில், "பிரதமர் மோடி தமிழக மக்கள், தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரத்தின் மீது அதிக பற்று வைத்துள்ளார். இதனால் தான் உலகம் முழுவதும் திருக்குறள் கலாச்சார மையம் திறந்து வருகிறார். திருக்குறளை 35க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்த்துள்ளார். இதுவரை தமிழகத்துக்கு ரூ.12 லட்சம் கோடி நிதி வழங்கியுள்ளார். பிரதமர் மோடி தமிழகம் வரும் போதெல்லாம் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்து வருகிறார். இன்று ரூ.4,500 கோடி நலத்திட்டங்களை தொடங்கி வைத்துள்ளார்" என தெரிவித்தார்.

தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் ஏ.வா.வேலு, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# ஓ.பி.எஸ்-ன் முடிவை நாங்கள் தவறாக எண்ணவில்லை இருப்பினும் அதை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை

## இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாநில செயலாளர் வழக்கறிஞர் மனோஜ் குமார் குன்னூரில் பேட்டி

நீலகிரி, மார்ச்.02-

ஓ.பி.எஸ் ன் முடிவை நாங்கள் தவறாக எண்ணவில்லை இருப்பினும் அதை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை என ஓ.பி.எஸ் அணியின் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாநில செயலாளர் வழக்கறிஞர் மனோஜ் குமார் குன்னூரில் பேட்டி....

ஓ.பி.எஸ். திமுகவில் நேற்று இணைந்த நிலையில் தமிழக அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது

ஓ.பி.எஸ். அணியில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பொறுப்பில் இருப்பவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என ஏராளமான உள்ளனர்

இந்த நிலையில் ஓ.பி.எஸ். அணியின்இளைஞர்,மற்றும் இளம் பெண்கள் பாசறை அணியின் மாநில செயலாளர் வழக்கறிஞர் மனோஜ் குமார் செய்தியாளர்களை சந்தித்தார் அவர் கூறியதாவது

ஓ.பி.எஸ்ன், முடிவை நாங்கள் தவறாக எண்ணவில்லை இருப்பினும் அதை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை

ஓ.பி.எஸ். அணியில் தமிழ்நாடு முழுவதும் ஏராளமானவர் இருந்து வருகின்றனர் அவர்களுக்கு ஆதரவு குரல் இன்னும் எங்கிருந்தும் வரவில்லை.

அதிமுக கட்சியில் இருந்து கூட உங்களை ஏற்கிறோம் என்று இன்னும் எந்த ஒரு தகவலும் வரவில்லை இப்போது தலைவரே இல்லாமல் தொண்டர்கள் மட்டும் உள்ளோம். என்ன செய்வது என்று தெரியாமல் உள்ளோம்

மார்ச் 10 ஆம் தேதி அனைத்து தொண்டர்களையும் இணைத்து ஒரு கூட்டம் கூட்டி கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை என்ன எடுப்பது என்று முடிவு செய்ய உள்ளோம்

ஓ.பி.எஸ். அவர்கள் கடைசியாக வைத்த ஒரு கூட்டத்தில் நாம் யாரிடத்தில் சேரலாம் அதாவது த.வெ.க அல்லது திமுகவா என கேட்டார் அதில் 11 மாவட்ட செயலாளர்கள் திமுக என்றனர். ஆனால்நாங்களோ திமுக என்ற கேள்வி வைத்ததே தவறு என்று தெரிவித்தோம்.

ஆனால் அவரோ அதிகாரப்பூர்வமாக எந்த ஒரு கூட்டத்தையும் கூட்டாமல் சென்று விட்டார்.

ஆதலால் விரைவில் கூட்டத்தைக் கூட்டி ஒரு முடிவு எடுக்க உள்ளோம். என்று வழக்கறிஞர் மனோஜ் குமார் தெரிவித்தார்.

# மு.கஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு தாம்பரம் மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் மு.தினேஷ்குமார் ஏற்பாட்டில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்

தாம்பரம், மார்ச்.02-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் மார்ச் 1ல் கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு தாம்பரம் மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் மு.தினேஷ்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா கலந்து கொண்டு இனிப்பு மற்றும் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார் இதில் 5வதுமண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன், 4வதுமண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ், ரமணி ஆதிமூலம், வி.முனுசாமி, கி.வேல்மணி, பி.ஜோதிகுமார், சசிகலா கார்த்திக், ஏ.லோகேஷ் குமார், ஏ.நசீர், விஜி






சிவகுமார் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் வீ.கார்த்திக், வே.சிவசுப்ரமணியன், வட்ட கழக செயலாளர்கள் ரமேஷ் பாபு, கு.பிரபாகரன், த.முருகன், கோமதி லோகநாதந்தன், ஆர்.கே. பாலாஜி, எல்எம்.சக்தி, டி.தினேஷ் குமார், ஜே.கிருபாகர், பகுதி மாணவர் அணி அமைப்பாளர் சந்தோஷ்குமார், துணை அமைப்பாளர் கிஷோர், ராஜசிவா மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாநகர, பகுதி, அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் கழக முன்னோடிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதனை தொடர்ந்து மாற்றுகட்சியில் இருந்து 50க்கும் மேற்பட்டோர் மாநகர மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

# 10, 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உற்சாக வாழ்த்து: "தன்னம்பிக்கையுடன் தேர்வை எதிர்கொள்ளுங்கள்; வெற்றி நிச்சயம்" கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் வாழ்த்துச் செய்தி

கிருஷ்ணகிரி, மார்ச்.02-



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ் குமார் அவர்கள், 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கு வாழ்த்து மற்றும் உற்சாக செய்தியை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது:

"அன்புள்ள மாணவ, மாணவியர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள். 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வை எதிர்கொள்ள தயாராகி வரும் மாணவர்களுக்கும், அவர்களுக்காக அயராது உழைக்கும் ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுத்தேர்வு என்பது உங்கள் கல்விப் பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும். இது உங்கள் அறிவு, உழைப்பு, ஒழுக்கம் மற்றும் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தும் சிறந்த வாய்ப்பாகும். எனவே, தேர்வை பயமோ பதற்றமோ இன்றி தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும்.

நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்தி, தேர்வறையில் வினாத்தாள்களை அமைதியாக வாசித்து புரிந்து கொண்டு தெளிவாக பதிலளிக்க வேண்டும். கடந்த ஓராண்டாக நீங்கள் எடுத்த முயற்சிகளும், கடின உழைப்பும் நிச்சயமாக நல்ல பலனைத் தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

மேலும், தேர்வு நாட்களில் உடல்நலனையும் மனநலனையும் பாதுகாத்துக் கொள்வது அவசியம். போதிய ஓய்வு, சீரான உணவு மற்றும் நேர்மறை எண்ணங்கள் உங்கள் செயல்திறனை உயர்த்தும்.

உங்களை வெற்றிப்பாதைக்கு வழிநடத்தும் ஆசிரியர்கள் மற்றும் கல்வி அலுவலர்களின் அர்ப்பணிப்பு மிக்க வழிகாட்டுதல்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு என்றும் அடித்தளமாக இருக்கும்.

நீங்கள் அனைவரும் சிறப்பாக தேர்வெழுதி அதிக மதிப்பெண்கள் பெற்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பெருமை சேர்ப்பீர்கள் என்று நான் முழுமையாக நம்புகிறேன்.

'வெற்றி நிச்சயம்' ரூ 'தன்னம்பிக்கையுடன் தேர்வை எதிர்கொள்ளுங்கள்'" என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.





■ திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் 73 வது பிறந்தநாளை முன்னிட்டு நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே எடப்பள்ளி மைதானத்தில் திமுக தலைமை பொது குழு உறுப்பினர் காளிதாசன் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ஊட்டி தேனாடுகம்பை அணியினர்களுக்கும், அப்பகுதியில் உள்ளவர்களுக்கும், இனிப்புகள் வழங்கியும், திமுக கட்சியின் வர்ணம் கொண்டதும் தன்னுடைய பெயர் பொரிக்கபட்டதுமான,டீ சர்ட்டுகளை வழங்கி, கொண்டாடினார்.

## மாநிலங்களவை எம்.பி. பதவி அன்புமணிக்கு உறுதியானது

பாமகவில் ராமதாஸ், அன்புமணி இடையே நிலவி வரும் பிரச்சினையால் கட்சியினர் இரு பிரிவுகளாக செயல்பட்டு வருகின்றனர். கட்சியில் உள்ள 5 எம்எல்ஏக்களில் ஜி.கே. மணி, இரா.அருள் ராமதாஸுக்கு ஆதரவாக உள்ளனர். எஸ்.பி.வெங்கடேஸ்வரன், எஸ்.சதாசிவம், சி.சிவக்குமார் ஆகியோரும் கட்சி நிர்வாகிகளில் பெரும்பலானோரும் அன்புமணிக்கு ஆதரவாக உள்ளனர். கட்சியும், மாம்பழம் சின்னமும் தனது பக்கமே இருப்பதால், அதிமுக கூட்டணியில் அன்புமணி இணைந்தார். அதிமுக கூட்டணியில் 18 தொகுதிகள் அன்புமணிக்கு ஒதுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. அதற்கான பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இதற்கிடையில், தமிழகத்தில் காலியாகவுள்ள 6 மாநிலங்களவை எம்.பிக்களுக்கான தேர்தல் மார்ச் 16ம் தேதி நடைபெறவுள்ளது. இதில், 2 எம்.பி.க்கள் அதிமுகவுக்கு கிடைக்கவுள்ள நிலையில், அதில் ஒரு எம்பி பதவியை அன்புமணிக்கு விட்டுக்கொடுக்க அதிமுக முன்வந்துள்ளது. அதற்கான, அதிகாரபூர்வ அறிவிப்பு ஓரிரு நாளில் வெளியாகவுள்ளது.



■ தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் அவர்கள் நேரில் சந்தித்து புத்தகம் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார்.



# காவேரிப்பட்டினத்தில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் விற்கும் கடைகளில் திடீர் சோதனை: 300 கிலோ பறிமுதல், அபராதம் விதிப்பு

கிருஷ்ணகிரி, மார்ச் .02-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் பேரூராட்சியில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனைக்கு எதிராக திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் உத்தரவின்படியும், பேரூராட்சி செயல் அலுவலர் ராணி அவர்களின் ஆலோசனையின் பேரிலும், பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் இணைந்து இந்த சோதனையை நடத்தினர்.

காவேரிப்பட்டணம் பகுதிகளில் இயங்கி வந்த பல பிளாஸ்டிக் கடைகளில் ஆய்வு மேற்கொண்ட போது, 300 கிலோவுக்கும் அதிகமான தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. தமிழக அரசின் உத்தரவை மீறி இவ்வகை பொருட்களை சேமித்து விற்பனை செய்த கடை உரிமையாளர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டது.

இனி இதுபோன்ற தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யக் கூடாது என கடை உரிமையாளர்களுக்கு அதிகாரிகள் கடுமையான எச்சரிக்கை விடுத்தனர். தொடர்ந்து இதுபோன்ற சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தனர்.

மேலும், "பிளாஸ்டிக்கை ஒழித்து மஞ்சள் பையை பயன்படுத்துவோம்" என்ற தமிழக அரசின் விழிப்புணர்வு வாசகத்துடன் வீதிகள் தோறும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் பேரூராட்சி நிர்வாகம் மேற்கொண்ட இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73-வது பிறந்தநாளை முன்னிட்டு கழக கொடியேற்றி வைத்து இனிப்புகள் வழங்கி 1000பேர்க்கு அன்னதானம்

பம்மல், மார்ச்.02-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பம்மல் இரட்டைப்பிள் ளையார் கோவில் அருகில் உறுதிமொழி ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் 73-வது பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மாநகராட்சி, 1வது மண்டல குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் பம்மல் வே.கருணாநிதி அவர்கள் ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன், பகுதி பொருளாளர் ஆர். உமாசங்கர், பகுதி துணை செயலாளர் என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதி பி.ஜே.வேந்தன், என்.கே. ரவிச்சந்தின், இரா.கந்தவேலு, ரா.கோகுல், சு.மனோகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் வி.ரவிச்சந்திரன்,மாநகர இளைஞர்





அணி அமைப்பாளர் சத்தியபிரபு ஆகியோர் முன்னிலையில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் கழக இருவண்ண கொடியேற்றி 1500 நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார் இதனை தொடர்ந்து பம்மல் தெற்கு பகுதிக்கு உட்பட்ட 5,6,7, 8,10,11,12 ஆகிய வார்டுகளில் வட்ட கழக செயலாளர்கள் ஏ.அனிஸ்டன், வி.எஸ்.ஜெகநாதன்,மு.இன்பசேகர், என்.காந்தி, எச்.முகமது அப்பாஸ், எம்.சுகுமாரன், பி.ஸ்ரீதர் ஆகியோர் ஏற்பாட்டில் வட்டங்கள் தோறும் கழக இருவண்ண கொடியேற்றி இனிப்பு, நலதிட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது இதில் மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி, ரம்யா சத்தியபிரபு, ஆ.மதினாபேகம், சத்யா மதியழகன், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



■ கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியம் சின்னக்கம்பாளையம் பேரூர் தி.மு.க, சார்பில் காங்கயம் பாளையம் கருணை இல்லத்தில் ஆதரவற்ற மாணவச் செல்வங்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது. மதியம் மற்றும் இரவு உணவு வழங்கப்படுகிறது. இதில் பேரூர் கழகச் செயலாளர் ரா.பன்னீர்செல்வம், பேரூர் இலக்கிய அணி அமைப்பாளர் N.செல்வராஜ் அமராவதி நீர் பாசன சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி இளைஞரணி துணை அமைப்பாளர் தினேஷ் குமார், கதிரேசன் மற்றும் M.நாட்டுத்துரை, சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா குலமங்கலம் எழுந்து அருள் பார்த்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ பெருங்காரையடிமீண்டஅய்யனார் மாசி மாத திருவிழாவை முன்னிட்டு பக்தர்கள்காகித மாலைகள் லட்சக்கணக்கான மாலைகள் சாமிக்கு சாத்தி வேண்டுதலை நிறைவேற்றினார்கள்

# "அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்" பழனிசாமி நம்பிக்கை

மதுரை, மார்ச்.02-

''தேசிய ஜனநாயக கூட்டணி அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்'' என்று அதிமுக பொதுச்செயலாளர் கே.பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மதுரை தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளர் கே.பழனிசாமி பேசியதாவது: திமுக கூட்டணியில் இன்னும் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்க வில்லை. ஆனால், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் பிரச்சாரத்தை தொடங்கி, இரண்டாவது பொதுக்கூட்டம் மதுரையில் நடைபெ றுகிறது.

இந்திய நாடே தற்போது தமிழக சட்டப்பேரவை தேர்தலில் யார் வெற்றிப்பெற போகிறார்கள் என்று உற்றுநோக்கி பார்த்து வருகிறது. மக்கள் விரோத ஆட்சியை அகற்றவே தேசிய ஜனநாயக கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. எங்கள் கூட்டணியில் மக்கள் செல்வாக்கு பெற்ற கட்சிகள் இணைந்துள்ளன. எம்ஜிஆர், ஜெயலலிதாவுக்கு தென் மாவட்ட மக்கள் பக்கபலமாக இருந்தனர்.

எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கியபோது திண்டுக்கல் மக்களவை த்தேர்தலில் வெற்றியை கொடுத்து தென் மாவட்ட மக்கள் ஆதரித்தனர். அதுபோல், வரும் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்ட ணியை அதிக தொகுதி களில் வெற்றிபெறச் செய்து அதிமுக ஆட்சி அமைய தென் மாவட்ட மக்கள் துணை நிற்பார்கள்.

அதிமுகவை பொறுத்த வரையில் அது சாதி, மதத்திற்கு அப்பாற்பட்ட கட்சி. பல்வேறு சோதனைகளை கண்ட கட்சி. 31 ஆண்டுகள் தமிழகத்தை ஆட்சி செய்த கட்சி. பொன்விழா கண்ட கட்சி. தமிழகம் இந்தளவுக்கு வளர்ந்துள்ளதற்கு எங்கள் அதிமுக தலைவர்கள் தமிழகத்திற்கு பல்வேறு திட்டங்களை கொண்டு வந்ததே முக்கிய காரணம்.

பிரதமர் மோடி உலக நாடுகளே பொறாமைப்படும் அளவிற்கு இந்திய நாட்டை ஆட்சி செய்கிறார். முதல்வர் ஸ்டாலின் அடிக்கடி



மத்திய ஆட்சியர்கள், எந்த வளர்ச்சியும், நிதியையும் தமிழகத்திற்கு கொடுக்கவில்லை என்று அவதூறுகளை பரப்பி வருகிறார். இன்று இந்த மேடைக்கு வருவதற்கு முன் கூட அரசு விழாவில் தமிழகத்திற்கு ரூ.4,500 கோடி வளர்ச்சி திட்டங்களுக்கு கொடுத்து விட்டுதான் வந்துள்ளார்.

ஒவ்வொரு முறையும் தமிழகம் வரும்போது ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை தமிழகத்திற்கு பிரமர் மோடி வாரி வழங்கி வருகிறார். ஆனால், திமுக கூட்டணி கட்சியினர் செய்த சாதனைகளை சொல்வதற்கு எதுவும் இல்லாமல் மத்திய அரசு மீது திட்டமிட்டு அவதூறு செய்திகளை பரப்பி வெற்றிபெற பார்க்கிறார்கள்.

திமுகவுக்கு குடும்ப நலன் மட்டுமே அக்கட்சியின் நிலைபாடாக உள்ளது. காற்று கண்ணுக்கு தெரியாது. ஆனால், அந்த காற்றில் கூட ஊழல் செய்த ஒரே கட்சி திமுக. 2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேட்டில் ரூ.1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் செய்தனர். திமுக விஞ்ஞான முறையில் ஊழல் செய்த கட்சி என்று சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

ஊழலுக்காக கலைக்க ப்பட்ட ஒரே ஆட்சி திமுக ஆட்சிதான். ஊழல் நிறைந்த திமுக ஆட்சி அகற்றப்பட வேண்டும். தென் மாவட்டங்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. 11 அரசு மருத்துவக்கல்லூரிகள் அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. திமுக ஆட்சியில் ஒரு மருத்துவக்கல்லூரியைக் கூட பெற முடியவில்லை. பாம்பன் ரயில்வே பாலத்தை பிரதமர் கட்டி கொடுத்துள்ளார்.

ஜெயலலிதா ஆட்சியில் இருந்தபோதுதான் 'எய்ம்ஸ்' மருத்துவமனை மதுரைக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது இந்த மருத்துவமனைப் பணிகள் நடந்து வருகின்றன. அந்த மருத்துவமனையை வர விடாமல் திமுக தடுக்க பார்த்தது. மதுரை விமானநிலையம் விரிவாக்கம் செய்வதற்கு அதிமுக ஆட்சியில் 'அன்டர் பாஸ்' முறையில் பல்வேறு முயற்சிகளைச் செய்தோம். தற்போது இந்த திட்டத்தையும் திமுக அரசு முடக்கி வைத்துள்ளது. ஐந்து ஆண்டு கால ஆட்சியில் மதுரை விமானநிலையம் விரிவாக்கத்திற்கு திமுக ஆட்சியில் எந்த முயற்சியும் நடக்கவில்லை. இவ்வாறு அவர் பேசினார்.

# பழனியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் பழனி பாலன் ஏற்பாட்டில் செயல் வீரர்கள் கூட்டம்

திண்டுக்கல், மார்ச்.02-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தனியார் மண்டபத்தில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக மாவட்ட செயற்குழு உறுப்பினர் பழனி பாலன் ஏற்பாட்டில் மாவட்ட தலைவர் கார்த்திக் ராஜா மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு இந்த செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சுமார் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.




இந்நிகழ்வில் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் , தேர்தல் நேரத்தில் கட்சி பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் எவ்வாறு செயல்பட வேண்டும் என எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் இந்த கூட்டத்தில் பேசிய பொறுப்பாளர்கள் தீய சக்தி திமுக தேர்தலை முன்னிட்டு மக்களை ஏமாற்றும் விதமாக 5000 ரூபாயை கொடுத்துள்ளது. அதுவும் தலைவர் விஜய் அவர்களின் அரசியல் செய்வதை கண்டு திமுக அஞ்சி இந்த ஐயாயிரம் ரூபாயை கொடுத்துள்ளது என பேசினர் . இதனிடையே முக்கிய தீர்மானங்கள் இயற்றப்பட்டது. முன்னதாக இந்நிகழ்வில் பொறுப்ப ாளர்கள் மிதுன் ,நாகராஜ் மற்றும் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள் ,கட்சித் தொண்டர்கள் மற்றும் ரசிகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



■ திமுக கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி வி. முக.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார். போக்குவரத்து துறை மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தெரிவித்தார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தாம்பரம் மாநகர மேற்கு பகுதி திமுக சார்பில்

# கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு கழக கொடியேற்றி வைத்து இனிப்பு மற்றும் காலை சிற்றுண்டி வழங்கினார்

தாம்பரம், மார்ச்.02-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர மேற்கு பகுதி சார்பில் திமுக கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதியில் பல்வேறு இடங்களில் கொடியேற்றி வைத்து காலை சிற்றுண்டி மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சி 62வது வட்டக் கழக செயலாளர் பிரபாகரன், 63வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஜோதி குமார், 63வது வட்ட பொறுப்பாளர் கோமதி லோகநாதன், பகுதி துணைச் செயலாளரும் கழகப் பேச்சாளரும் வேல்மணி, பகுதி அவை தலைவர் வி.முனுசாமி, மாநகரப் பிரதிநிதி நசீர், 48வது மாமன்ற உறுப்பினர் சசிகலா கார்த்திக் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப் பாளராக தாம்பரம் மேற்கு பகுதி கழகச் செயலாளரும் ஐந்தாவது



மண்டலக்குழு தலைவ ருமான எஸ்.இந்திரன் கலந்துகொண்டு கழக கொடியேற்றி வைத்து இனிப்புகள் வழங்கி காலை சிற்றுண்டிகள் வழங்கினர்

இந்த நிகழ்ச்சியில் பகுதி துணை செயலாளரும் கழக பேச்சாளருமான வேலுமணி, மாநகரப் பிரதி நிதிகள் லோகேஷ், விஜி சிவகுமார் தாம்பரம் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்திக், வே.சிவசுப்பிரமணியன், பகுதி இளைஞர் துணை அமைப்பாளர் ஆர்.கே. பாலாஜி, எல்.எம்.சக்தி, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய கழக நிர்வாகிகள் பட்டத கழக நிர்வாகிகள் அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## சென்னையில் மார்ச் 5 முதல் அரசு மருத்துவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம்

சென்னை, மார்ச்.01-

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354 மறு வரையறை, ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு படிகள் ரூ.3 ஆயிரம், நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதிய மருத்துவ பணியிடங்கள் உள்ளிட்ட கோரிக் கைகளுக்காக அரசு மருத்துவர்கள் நீண்டகால மாக போராடி வருகின்றனர்.

இந்நிலையில், அடுத்தக் கட்டமாக வரும் 5ம் தேதி முதல் சென்னையில் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறி வித்துள்ளனர். இதுதொடர்பாக. அனைத்து அரசு மருத்துவர்கள் சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் பாலகிருஷ்ணன், ராமலிங்கம், அகிலன், சுந்தரேசன் ஆகியோர் கூறுகையில், வரும் 5ம் தேதி முதல் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுப்பது என கூட்டமைப்பின் செயற்குழுவில் முடிவு செய்யப்பட்டது என்றனர்.

### விவசாய நிலத்தில் குப்பைக்கிடங்கு அமைக்க எதிர்ப்பு

# மார்ச் 4ல் இளையான்குடி பேரூராட்சி அலுவலகத்தை முற்றுகையிடப் போவதாக அறிவிப்பு

இளையான்குடி மார்ச்.02

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி நிர்வாகம், விவசாய நிலங்களுக்கு அருகிலும், நீர்நிலைகளை ஆக்கிரமித்தும் குப்பைக்கிடங்கு அமைக்க முயற்சிப்பதைக் கண்டித்து வரும் மார்ச் 4ஆம் தேதி (04.03.2026) மாபெரும் முற்றுகைப் போராட்டம் நடைபெற உள்ளது.

போராட்டத்தின் பின்னணி:

இளையான்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஏராளமான அரசு புறம்போக்கு நிலங்கள் மற்றும் பயன்பாடற்ற நிலங்கள் கையிருப்பில் உள்ளன. ஆனால், அவற்றை விடுத்து சுற்றுச்சூழல் விதிகளுக்குப் புறம்பாக, விளைநிலங்களுக்கு அருகிலும், கண்மாய் மற்றும் கால்வாய் பகுதிகளை ஆக்கிரமித்தும் குப்பைக்கிடங்கு அமைக்க நிர்வாகம் முடிவு செய்துள்ளதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

முக்கியப் புகார்கள்:

* சுற்றுச்சூழல் பாதிப்பு: குப்பைக்கிடங்கு அமையவுள்ள இடத்தின் மிக அருகிலேயே தடியார் உடையார் திருக்கோவில் மற்றும் 8 மீட்டர் தொலைவில் திருவுடையார்புரம் கண்மாய் அமைந்துள்ளது.

* விதிமீறல்: தென்கால்வாயைத் தூர்த்துவிட்டு இந்தப் பணியைச் செய்ய முற்படுவதாகவும், இதனால் விவசாயமும் பொது சுகாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

* அலட்சியம்: இது தொடர்பாக கொ.இடையவலசை, அ.மெய்யனேந்தல், மற்றும் நகரகுடி ஆகிய ஊராட்சி மன்றங்களில் கடந்த ஜனவரி 26 அன்று கிராமசபை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், பேரூராட்சி நிர்வாகம் அதை கண்டுகொள்ளவில்லை எனப் போராட்டக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

முற்றுகைப் போராட்டம்:

இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தவும், பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் தியாகி இமானுவேல் பேரவை மற்றும் போராட்டக் குழு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

* நாள்: 04.03.2026 (புதன்கிழமை)

* நேரம்: காலை 10.00 மணி

* இடம்: பேரூராட்சி அலுவலகம், இளையான்குடி

இந்த அறவழிப் போராட்டத்தில் சமூக ஆர்வலர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொள்ளுமாறு கொ. இடையவலசை, நகரகுடி மற்றும் அ.மெய்யனேந்தல் ஊராட்சிப் பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# ஈரான் பதிலடி கொடுத்தால் விளைவுகள் மோசமாகும் ட்ரம்ப் எச்சரிக்கை

ஈரான் கடும் தாக்குதலை நடத்துமானால் இதற்கு முன் பார்த்திராத ஒரு பெரும் சக்தியைக் கொண்டு நாங்கள் அவர்களைத் தாக்குவோம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள ட்ரூத் சமூக ஊடக பதிவில், ''இன்று ஈரான் மிகக் கடுமையாகத் தாக்கப் போவதாகவும், அது முந்தைய தாக்குதல் களைவிட மிகவும் வலிமை யானதாக இருக்கும் என்றும் அந்நாடு தெரிவித் துள்ளது. அதை அவர்கள் செய்யாமல் இருப்பது நல்லது. ஒருவேளை அவர்கள் அவ்வாறு தாக்கினால், இதற்கு முன் பார்த்திராத ஒரு பெரும் சக்தியைக் கொண்டு நாங்கள் அவர்களைத் தாக்குவோம்'' என்று தெரி வித்துள்ளார். முன்னதாக, அவர் வெளியிட்ட ஒரு சமூக ஊடக பதிவில் ஈரானின் மத தலைவரான அயோதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டதாக அறிவித்தார். அவர் தனது



பதிவில், "வரலாற்றின் மிக மோசமான மனிதர்களில் ஒருவரான கமேனி இன்று இறந்துவிட்டார். இது ஈரானிய மக்களுக்குக் கிடைத்த நீதி மட்டுமல்ல, கமேனியாலும் அவரது ரத்தவெறி பிடித்த குண்டர் கும்பலாலும் கொல்லப்பட்ட அல்லது சிதைக்க ப்பட்ட பல நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கும், சிறந்த அமெரிக்கர்களுக்கும் கிடைத்த நீதியாகும்.

எங்களுடைய உளவுத் துறை மற்றும் அதிநவீன கண்காணிப்பு அமைப்புக ளிடமிருந்து அவரால் தப்பிக்க முடியவில்லை. இஸ்ரேலுடன் இணைந்து நாங்கள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையில், அவரோ அல்லது அவ ருடன் சேர்ந்து கொல் லப்பட்ட மற்ற தலைவர்களோ தற்காத்துக் கொள்ள எதுவுமே செய்ய முடியவில்லை. ஈரானிய மக்கள் தங்கள் நாட்டை மீட்டெடுப்பதற்கான ஒற்றைப் பெரும் வாய்ப்பு இதுவாகும். ஈரானிய புரட்சிகர பாதுகாப்புப் படை, ராணுவம் மற்றும் பிற பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த பலர் இனிப் போரிட விரும்பவில்லை என்றும், எங்களிடமிருந்து பாதுகாப்பை எதிர்பா ர்ப்பதாகவும் எங்களுக்குத் தகவல்கள் வருகின்றன. நான் ஏற்கெனவே சொ ன்னது போல, இப்போது சரணடைந்தால் அவர்களு க்குப் பாதுகாப்பு உண்டு, காலம் கடந்தால் அவர்களுக்கு மரணம் மட்டுமே மிஞ்சும்! ஈரானிய புரட்சிகர பாதுகா ப்புப் படையும் காவல்து றையும் அமைதியான முறையில் ஈரான் தேசப்பற்றாளர்களுடன் இணைந்து, இந்த நாடு தகுதியுள்ள அந்தப் பெருமையை மீண்டும் அடைய ஒரு பிரிவாகச் செயல்படும் என்று நம்புகிறேன். கமேனியின் மரணம் மட்டுமல்லாமல், ஒரே நாளில் அந்த நாடு பெருமளவில் அழிக்கப்பட்டு, சிதைக்க ப்பட்டுள்ள நிலையில், இந்த மாற்றம் விரைவில் தொடங்கும்.

எவ்வாறாயினும், மத்திய கிழக்கு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்டும் எங்களது இலக்கை அடையும் வரை, இந்தத் தீவிரமான மற்றும் துல்லியமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் இந்த வாரம் முழுவதும் தடை யின்றித் தொடரும்" என்று தெரிவித்திருந்தார். இதனிடையே, ஈரானின் ராணுவத் தளபதியும், பாதுக ாப்பு அமைச்சரும் கொல்லப் பட்டதை ஈரானின் அரசு தொலை க்காட்சி உறுதிப்படுத்தி உள்ளது. ராணுவத் தளபதி ஜெனரல் அப்தோல் ரஹீம் மவுசவி, பாதுகாப்பு அமைச்சர் ஜெ னரல் அஜீஸ் நசீர்சாதே ஆகியோர் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் பங்கேற் றபோது கொல் லப்பட் டதாக இன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயோதுல்லா அலி கமேனி கொல்ல ப்பட் டதை அடுத்து அந்த நாட்டில் பதற்றம் அதிகரித் துள்ளது. ஏராளமான மக்கள் பொது இட ங்களில் ஒன்றுகூடி தங்கள் எதிர் ப்பை, சோகத்தை வெளிப் படுத்தி வருகின்றனர். ஈ ரானுக்கு வெளியேயும் பல நாடுகளில் ஷியா பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள், அயோதுல்லா அலி கமேனியின் மறைவுக்கு கடும் கண்டனம் தெரிவித் துள்ளனர். அயோதுல்லா அலி கமேனி கொல்லப் பட்டதை அடுத்து, ஈரானி ன் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (IRGC), மத்திய கிழக்கு முழுவதும் உள்ள முக்கிய அமெரிக்க ராணுவ மையங்களைக் குறிவைத்து தாக்குதலை தொடங்கியுள்ளது. "ஆபரேஷன் ட்ரூத்ஃபுல் ப்ராமிஸ் 4" என பெயரி டப்பட்டுள்ள இந்த தாக்குதலில், ஆறு மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஏழு அமெரிக்க ராணுவ தளங்கள் குறிவைக்கப்பட்டுள்ளன.

# ரேஷனில் செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை நிறுத்த மத்திய அரசு முடிவு

சென்னை, மார்ச்.02-

நீண்ட காலம் சேமித்து வைப்பதில் சிக்கல் ஏற்பட்டதால், செறிவூட்டப்பட்ட அரி சியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

ஊட்டச்சத்து குறைபாட்டை போக்க, இரும்பு சத்து, ஃபோலிக் அமிலம், வைட்டமின் பி12 ஆகிய நூண்ணூட்ட சத்துக் களுடன் செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கும் திட்டத்தை பிரதமர் மோடி கடந்த 2021ம் ஆண்டு அறி வித்தார்.

விவசாயிகளிடம் இருந்து மத்திய அரசு கொள்முதல் செய்யும் அரிசிகள் உணவு தானிய சேமிப்பு கிடங்கில் 2 முதல் 3 ஆண்டுகள் வரை சேமித்து வைக்கப்படுகின்றன. நாடு முழுவதும் உள்ள மத்திய அரசின் உணவு கிடங்குகளில் 674 லட்சம் டன்கள் இருப்பு வைக்க ப்பட்டுள்ளன. இவற்றில் 372 லட்சம் டன்கள் ஒவ்வொரு ஆண்டும் இலவச அரிசி திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன.

இந்நிலையில், செறிவூட்டப்பட்ட அரிசியை எவ்வளவு காலம் சேமித்து வைக்க முடியும் என்ற ஆய்வில் காரக்பூர் ஐஐடி ஈடுபட்டது. நமது நாட்டின் தட்ப வெப்ப சூழ்நிலையில், செறிவூட்டப்பட்ட அரி சியை நீண்ட காலம் சேமித்து வைத்தால் அது உடைந்து விடுகிறது. மேலும், அவற்றில் உள்ள நுண்ணூட்ட சத்துக்களின் அளவுகளும் குறைவது ஆய்வில் தெரிய வந்தது.

இதையடுத்து இப்பிரச்சினைகளுக்கு நவீன தொழில்நுட்பம் மூலம் தீர்வு காணும் வரை செறிவூட்டப்பட்ட அரிசியை ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்வதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

மாலை தந்தி

திங்கள்கிழமை 02.03.2026



## மானாமதுரை பாபா பள்ளியின் 47-வது ஆண்டு விழா விமரிசையாக நடைபெற்றது

மானாமதுரை மார்ச் 02-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா நர்சரி - பிரைமரி பள்ளியின் 47 வது ஆண்டு விழா மற்றும் கலை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்கள்

இந்த விழாவிற்கு ரயில்வே உதவி கோட்ட மின் பொறியாளர் மோகன் கிருஷ்ணன், ரயில்வே நிலைய மேலாளர் K. குமாரசாமி மற்றும் இருப்புப்பாதை சார்பு ஆய்வாளர் (காவல்துறை) வேல்முருகன் ஆகியோர் தலைமை தாங்கி விழாவினை சிறப்பித்தனர்.

விருதுகளும் கௌரவங்களும்

இவ்விழாவில் கல்வியில் முதலிடம் பிடித்த மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. அவர்களின் பெற்றோர்களுக்குப் பொன்னாடை அணிவித்து பள்ளி நிர்வாகம் சார்பில் கௌரவிக்கப்பட்டது. மேலும், பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கப்பட்டது.

கலை நிகழ்ச்சிகள்

ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவர்களின் கலைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் வில்லுப்பாட்டு போன்றவை நடைபெற்றன.

பள்ளி நிர்வாகம்

பள்ளியின் நிறுவனர் B. இராஜேஸ்வரி அம்மா அவர்கள் முன்னிலை வகிக்க, பள்ளியின் தாளாளர் ஆர். கபிலன் மற்றும் நிர்வாகி R. மீனாட்சி ஆகியோர் தலைமை ஏற்று விழாவினை வழிநடத்தினர்.

இந்த விழாவில் மெட்ரிக் பள்ளி முதல்வர் இராஜாராம், M. சாரதா ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளைப் பொறுப் பாசிரியர் M. பாண்டியம்மாள் மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர். விழா நாட்டுப்பண்ணுடன் இனிதே நிறைவுற்றது.

## காளையார்கோவில் அல்லூர் கிராமத்தில் புதிய ரேஷன் கடையை எம்.பி.கார்த்திக் சிதம்பரம் திறந்து வைத்தார்



காளையார் கோவில் மார்ச் 02-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம். நாட்டரசன் கோட்டை அருகேயுள்ள அல்லூர் ஊராட்சியில் பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையான புதிய ரேஷன் கடை கட்டடம் வேண்டுமென கோரிக்கை எழுந்தது...

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சுமார் 10.50. லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டடம் கட்டுவதற்கான நிதியை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக் ப.சிதம்பரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்னர் நேற்று மாலை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்...

முன்னதாக அல்லூர் கிராமப் பொதுமக்கள் மற்றும் பெண்கள் அனைவரும் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரத்திற்கு உற்சாகமாக வரவேற்பளித்தனர்...

அல்லூர் ஊராட்சி மேனாள் தலைவர் சோலை.செந்தில்வேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவர் வழக்கறிஞர் சஞ்சய் காந்தி. . காங்கிரஸ் வட்டார தலைவர்களான காளையார்கோவில் மதியழகன். கரும்பாவூர் உடையார் . மாவட்ட மேனாள் கவுன்சிலர்களான ஆரோக்கிய சாந்தாராணி . ஆட்டுக்காளி சந்தியாகு ஆகியோரது முன்னிலையி வகித்தனர்...

இதனிடையே இந்த நிகழ்ச்சியில் திமுக மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் அல்லூர் உமாசங்கர். கழக மூத்த முன்னோடி . அல்லூர் நீர்ப்பாசன சங்க தலைவர் ரவிச்சந்திரன். ஒன்றியப் பிரதிதி சங்கரலிங்கம். அழகு மெய்ஞானபுரம் காங்கிரஸ் கமிட்டி குரு.கணேசன். .அல்லூர் திமுக முனீஸ்வரன். பனங்காடி கே.ஆர்.பாண்டி. சீனி . தொத்தான்.என்ற கருப்பையா. . பழனிவேல்ராஜன் . நாகராஜன் . மணிகண்டன் . தாழை குரு.போஸ்.குரு.தேவதாஸ் . பனங்காடி பாண்டி . பனங்காடி கருப்பன் . அல்லூர் முத்துக் குமார். எலக் ட்ரீசியன் சுரேஷ்குமார்.ரேஷன்கடை அலுவலர்களான கார்த்திக். விக்னேஷ்வரன் . காங்கிரஸ் தென்னரசு உள்ளிட்ட பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்..

இதனிடையே கட்டடத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்த நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரத்திற்கு கிராமப் பொதுமக்கள் மற்றும் பெண்கள் நன்றி தெரிவித்தனர்..

நிகழ்ச்சி ஏற்பாடுகளை அல்லூர் கிராமப் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



## தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாள் விழா: கோலாந்தி கோதண்டபாணி ஏற்பாட்டில் அன்னதானம்

காளையார் கோவில், மார்ச்.02-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர். தொழிலதிபர் கோலாந்தி ஆர்.கோதண்டபாணி ஏற்பாட்டில் . நாட்டரசன்கோட்டை அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் கோவிலில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது...

அன்னதான நிகழ்ச்சியில் பங்கேற்ற பக்தர்கள் மற்றும் பெண்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீடுழி வாழ வேண்டுமென மனதார வாழ்த்தினர்...

நாட்டரசன் கோட்டை திமுக பேரூர்க்கழக செயலாளர் ஜெயராமன் தலைமையிலும். பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் கார்த்திகா முருகானந்தம் . எஸ்தர் மேரி வி.எஸ்.எம். ஸ்டீபன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

முன்னதாக தமிழக முதலமைச்சர் பெயரில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் வழிபாடுகள் நடைபெற்றன...

இந்த சிறப்பு வழிபாடு மற்றும் அன்னதான நிகழ்ச்சியில் துணைச் செயலாளர் வி.ஏ.ஓ.முத்து. . தொழிலதிபர் ஒன்றிய மேனாள் கவுன்சிலர் ஆர்.எம்.எல்.கருணாநிதி . கிளைச் செயலாளர் தொழிலதிபர் ஆர்.வி.எஸ். அரங்கநாதன். ஒன்றிய மேனாள் கவுன்சிலர் . மாவட்ட பிரதிநிதி மேப்பல் அழகப்பன். மாணவரணி அமைப்பாளர் ரமேஷ் என்ற சொக்கு. ஐடி விங் நரசிங்க ராமன். . பேரூர் வட்ட செயலாளர் முத்துக்கண்ணு . சௌந்திராராஜன்.

இளைஞரணி கணேசன். பாண்டிக்குமார். . ஐடி விங் பூமிநாதன் . நவீன் முருகானந்தம் உள்ளிட்ட ஏராளமான திமுக வினர் கலந்து கொண்டனர்...

நிகழ்ச்சி ஏற்பாடுகளை துணைச் செயலாளர் கோலாந்தி கோதண்டபாணி சிறப்பாக செய்திருந்தார்...





## காவேரிப்பட்டணத்தில் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

காவேரிப்பட்டணம், மார்ச்.02-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பேருந்து நிலையத்தில் மத்திய ஒன்றிய திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) சார்பில் தமிழக முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் 73ஆவது பிறந்தநாள் விழா கேக் வெட்டி விமர்சையாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு மத்திய ஒன்றிய கழக செயலாளர் தேங்காய் சுப்பிரமணி தலைமையேற்றார். கட்சி தொண்டர்கள் பட்டாசு வெடித்து, கேக் வெட்டி உற்சாகமாக கொண்டாடினர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய அவைத் தலைவர் இளங்கோ, ஒன்றிய துணைச் செயலாளர்கள் தமிழரசு, பரமசிவம், ஒன்றிய பொருளாளர் பிரகாசம், மாவட்ட ஓட்டுநர் அணி தலைவர் செந்தில்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பாரி, மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் முருகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சண்முகம், ஒன்றிய பொறியாளர் அணி அமைப்பாளர் சஞ்சீவன், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சிற்றரசு, ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் பரத், ருத்ரமணி, ராஜா, குமரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## பள்ளிக்கரணை ஜெ.எல். லட்சுமி தலைமையில் முன்னாள் முதல்வர், ஜெ.ஜெயலலிதா பிறந்தநாள் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள்

பள்ளிக்கரணை, மார்ச். 02-

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணை மாநகராட்சி அலுவலகம் அருகில் 27.01.26 அன்று மாலை 6 மணிக்கு 191 வது மாமன்ற உறுப்பினர், பள்ளிக்கரணை பகுதி செயலாளர், ஜெ. எல் .லட்சுமி தலைமையில் முன்னாள் முதல்வர், ஜெ. ஜெயலலிதா 78 வது பிறந்தநாள் முன்னிட்டு பொதுக்கூட்டம் மற்றும் 2000 க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் ஊனமுற்றோருக்கு மிதிவண்டி சைக்கிள் மற்றும் பெண்களுக்கு தையல் மிஷின்கள் , புடவைகள் போன்ற நல திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக நடைபெற்றது. சென்னை புறநகர் மாவட்ட செயலாளர், கே .பி .கந்தன் முன்னிலையில்

சிறப்பு அழைப்பாளர்களாக கழக வழக்கறிஞர்,பிரிவு தலைவர், வி. எஸ்.சேதுராமன் கழக அமைப்புச் செயலாளர்,கே. சிங்காரம் கழக செய்தி தொடர்பாளர், எம் .ஜமீலா ஆகியோர் பங்கேற்றனர்.

2026 சட்டமன்றத் தேர்தலில் மகளிருக்கு உதவி தொகை 2000, குடும்பத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 10000, போன்றவற்றை எடுத்துரைத்து எடப்பாடி, கே. பழனிச்சாமி தலை மையில் அதிமுக ஆட்சி அமை ந்திட வெற்றி பெற செய்ய வேண்டும் பொதுக் கூட்டம் நிகழ்ச்சி ஏற்பாடு செய்த பள்ளிக்கரணை பகுதி செயலாளர், ஜெ. எல். லட்சுமி உரை யாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் அம்மா பேரவை துணைச் செயலாளர்., பெரும் பாக்கம், இ.ராஜ சேகர், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர், லியோ, என். சுந்தரம், கழக பேச்சாளர் பு. மணவை மாறன், கழக இளம் பேச்சாளர் மதன்குமார் ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். வி. என் பி வெங்கட்ராமன், கழக அம்மா பேரவை துணைச் செயலாளர், சி. மணிமாறன், கழக எம்ஜிஆர் இளைஞர் அணி துணை செயலாளர், டி.சி கோவிந்தசாமி,ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர. நன்றி உரையாக : 190 வது மாமன்ற உறுப்பினர், பி. சிவப்பிரகாசம் உள்ளிட்ட அதிமுக தலைவர் நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## சிவகங்கை மேற்கு ஒன்றிய திமுக சார்பில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா

### ஒசெ.மந்தக்காளை தலைமை. பாலுச்சாமி. தமறாக்கி ரவி.சேர்மன் முத்துராமலிங்கம் பங்கேற்றனர்

சிவகங்கை, மார்ச்.02-

சிவகங்கை மேற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழக முதல்வர் ஸ்டாலின் 73 பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை புறநகர் பகுதியில் உள்ள அன்னை முதியோர் இல்லத்தில் காலைச் சிற்றுண்டி வழங்கப்பட்டது...

மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் . ஊராட்சி முன்னாள் தலைவர் கண்டாங்கிபட்டி பெ.மந்தக்காளை அம்பல க்காரர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அவைத்தலைவர் பாலுச்சாமி. தமறாக்கி வடக்கு ஊராட்சி மேனாள் தலைவர்.மாவட்ட விவசாய தொழிலாளரணி துணை அமைப்பாளர் தமறாக்கி ரவி. சிவகங்கை யூனியன் மேனாள் சேர்மன்.மாவட்டப் பிரதிநிதி தமறாக்கி தெற்கு முத்துராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்...

அன்னை இல்லத்தில் வசிக்கும் முதியோர்களுக்கு காலைச் சிற்றுண்டி மற்றும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடப்பட்டது... முதியோர் அனைவரும ம தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் நீடூழி வாழ வாழ்த்துகளைத் தெரிவித்தனர்...

இந்த நிகழ்ச்சியின் போது கழக மூத்த முன்னோடி மலம்பட்டி காளை மேகம். செல்லச் சாமி, ஒக்குபட்டி தவமணி. சந்திரசேகரன் . சுரேஷ். . மீனாட்சிபுரம் ஊராட்சி மேனாள் துணைவேந்தர் தமிழரசன். . மேற்கு ஒன்றிய திமுக ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் தமறாக்கி அம்பலம். புவனேஸ்வரி . முன்னாள் துணைச் செயலாளர் அழகேசன். சமத்துவபுரம் சமயத்துரை. . காரம்போடை பாலகிருஷ்ணன். போதிராஜா. சரவணன் உள்ளிட்ட ஏராளமான மேற்கு ஒன்றிய திமுகவினர் கலந்து கொண்டனர்... -



## காவேரப்பட்டணத்தில் திமுக நகர கழகம் சார்பில் திமுக தலைவர் ஸ்டாலின் பிறந்தநாள் விழா

காவேரிப்பட்டணம், மார்ச்.02-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் நகர திமுக கழகம் சார்பில் திமுக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களின் 73 ஆவது பிறந்தநாள் விழா இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் ஜே.கே.எஸ் பாபு தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் சாஜித், மாவட்ட ஓட்டுனர் அணி துணை தலைவர் செந்தில்குமார், நகர துணை செயலாளர் விஜயகுமார்,

மீனாட்சிபூங்காவனம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பி.வி.எஸ் மணி விஜயன், கவுன்சிலர் சக்தி,கிளைச் செயலாளர்கள் பாஸ்கர்,பழனி, ஸ்ரீதர், முன்னாள் பேரூராட்சி உறுப்பினர் பாரதிராஜா மற்றும் விஜய்சங்கர், இளையராணி, சதாம் உசேன், சீனிவாசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## முதலமைச்சர் பிறந்தநாள் விழா...சிவகங்கை சேர்மன் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் உற்சாகமாக கொண்டாட்டம்

### நகர செயலாளர் சேர்மன் சி.எம்.துரை ஆனந்த் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்

சிவகங்கை, மார்ச்.02-

சிவகங்கை நகர்க்கழகச் செயலாளர். நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை ஆனந்த் தலைமையில் சிவக ங்கை நகரின் மையப் பகுதியான ரெங்க நாயகி நாச்சியார் பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் மீனாட்சி கட்பீஸ் தனசேகரன். மாவட்ட திமுக செய்தித் தொடர்பாளர் கவுன்சிலர் அயூப் கான். கவுன்சிலர்களான சுப.ஜெயகாந்தன். மாவட்ட மாணவரணி வழக்கறிஞர் இராஜ அமுதன். தொகுதி ஐடி விங் ஒருங்கிணைப்பாளர் சதீஷ்குமார். வீர காளை. கீதா கார்த்திகேயன். இராமதாஸ். டி.எஸ்.பி.ஓய்வு ஞானசேகரன். நாகநாதர் நாச்சியப்பன். பாபு நாகராஜன் .கரும்பாவூர் சண்முகம். கீழக்குளம் ஏ.ஏ.சேகர் . இலக்கிய அணி பிரபாகரன். .முனியராஜ். விவசாய அணி பால்ராஜ் . கார்த்திக்.செந்தில்வேல் . பிரசன்னா . ஹரி பாஸ்கர்.

இளைஞரணி பொறியாளர் பிரபாகரன். சிறியூர் மாவட்டம் அழகர்சாமி உள்ளிட்ட ஏராளமான திமுக வினய் கலந்து கொண்டனர்..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161